# உங்கள் மனச்சாட்சிக்கு "ஹலோ" சொல்லுங்கள்

*இயேசு தேவாலயத்தில் போதிக்கையில், வேதபாரகர் களும், பரிசேயர்களும் விபசாரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பெண்ணொருத்தியை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். இயேசுவை அகப்படுத்த முயற்சித்த அவர்கள், "போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப் பட்டாள். இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர்" (யோவா. 8:4, 5) என்றார்கள். இயேசு, "உங்களில் பாவமில்லா தவன் இவள்மேல் முதலாவது, கல்லெறியக் கடவன்" (வ. 7ஆ) என்று பதில் அளித்தார். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட பொழுது, "அவர்கள் பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய் விட்டார்கள்" (வ. 9ஆ). ஏன் அவர்கள் போய் விட்டார்கள்? (மற்றும் தமிழ் மொழி பெயர்ப்பில்) ஒரு விளக்கம் கூட்டித் தரப்பட்டுள்ளது: "அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர் முதல் சிறியோர் வரைக் கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள்." "தங்கள் மனச் சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டவர்களாய்" என்ற சொற்றொடரானது வேதபாரகர்களும் பரிசேயர்களும் போய் விட்டது ஏன் என்பதற்கான ஒரு தொடக்க கால வேதபாரக விளக்கமாய் இருக்கலாம்.*

*"மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்படுதல்" என்ற சொற்றொடர் நம்மில் பலரால் அடையாளம் காணக் கூடிய தாகும். எங்களது மகள் ஆஞ்சி ஒரு சிறுபிள்ளையாய் இருந்த பொழுது, அவளை தூங்கவிடாது செய்யும், அவள் செய்த சில தவறான செயல்களை அறிக்கையிடுவதற்காக நள்ளிரவு நேரத்தில் என்னை பலமுறை எழுப்பிவிடுவதுண்டு. அநேகமாக*

நாம் யாவருமே நாம் பொய் கூறிய, ஒரு தேர்வில் ஏமாற்றிய, நம்முடையதல்லாத ஒரு பொருளை எடுத்துக் கொண்ட ஒரு வேளையை அல்லது வேறு ஏதேனும் தவறு செய்த வேளையை நினைக்க முடியும். அவை பற்றி நமது மனச்சாட்சி "நம்மைக் கடிந்து கொண்டிருக்கும்."

மனச்சாட்சியைப் பற்றி வேதாகமத்தில் நிறையக் கூறப் பட்டுள்ளது. "மனச்சாட்சி" என்ற வார்த்தையானது, பழைய ஏற்பாட்டில் அரிதாகவே காணப்படுகின்றது,[1] ஆனால் அதன் கருத்தானது - தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்த போது அவரிடத்தில் இருந்து ஒளித்துக் கொண்ட ஆதாம் ஏவாள் (ஆதி. 3:8) தொடங்கி - நன்கு அறியக் கூடியதாய் இருக்கின்றது. பல வருடங்களுக்குப்பின், யோசேப்பின் சகோதரர்கள் அவரை அடிமைத்தனத்தில் விற்றுப் போட்டு, தொடர்ந்த அந்த இதய மற்ற செயலின் நினைவினால் வேட்டையாடப்பட்டார்கள் (ஆதி. 42:21), தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக் கொண்டதினிமித்தம் அவன் மனது அடித்துக் கொண்டது (1 சாமு. 24:5) என்று வேதவசனம் குறிப்பிட்டது.

புதிய ஏற்பாட்டில், "மனச்சாட்சி" என்ற வார்த்தையானது அதன் முழுமையான தனிச்சிறப்புள்ள அர்த்தத்தைப் பெற்றுள்ளது. பெரும்பாலும் படிக்கக்கூடிய வேறு எந்த வார்த்தையைக் காட்டிலும் அதிகமாகப் புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தையானது முப்பத்தி இரண்டு முறை காணப் படுகின்றது. பெயர்ச்சொல் வடிவில் காணப்படும் இந்த முப்பத்தி இரண்டு பயன்பாடுகளுடன் கூட, இதன் வினைச் சொல் வடிவப் பயன்பாடானது புதிய ஏற்பாட்டில் மூன்று முறை காணப்படுகின்றது. பவுலின் எழுத்துக்களில் மட்டும் இது 21 முறை (எபிரெயர் நிருபத்தை அவர் எழுதியிருந்தால் 26 முறை) காணப்படுகின்றது.

மனச்சாட்சியைப் பற்றி வேதாகமம் கூறுவது என்ன என்பதைப் படிப்பது நமக்கு மிகவும் பயனுடையதாகும். "மனச்சாட்சி என்றால் என்ன?" என்று கேட்பது இப்பாடத் தைத் தொடங்க ஒரு நல்ல வழியாகும்.

## மனச்சாட்சி பற்றிய விவரணம்

எது மனச்சாட்சியல்ல என்பது பற்றி சுருக்கமாய்க் குறிப்

*பிட்டு நாம் தொடங்குவோம். (பாடக் கருத்தில் இந்த அம்சமானது அடுத்த பாடத்தின் தொடக்கப்பகுதிகளில் இன்னும் விபரமாய் விவாதிக்கப்பட்டுள்ளது.) முதலாவதாக, மனச்சாட்சியானது தன்னிலேயே ஒரு பாதுகாப்பான மார்க்க வழிகாட்டியல்ல. யூதர்களின் ஆலோசனைச் சங்கத்தின் முன்பாகப் பவுல் நின்றபோது, "சகோதரரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன்" (அப். 23:1அ) என்று கூறினார். பவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய போது கூட அவரது மனச்சாட்சியானது அவரைப் பாராட்டியது.*

*மனச்சாட்சி என்பது அறிவோ அல்லது சட்டமோ அல்ல. மாறாக அது தனக்குக் கிடைக்கும் அறிவு மற்றும் சட்டத்தின் படி செயல்படுகின்றது.*

*மற்றும், மனச்சாட்சி என்பது "மனிதருக்குள் இருக்கும் தேவனுடைய குரல்" அல்ல. பல ஆண்டுகளுக்கு முன் இருந்த எழுத்தாளர்களின் மத்தியில் இது ஒரு பொதுவான கருத்தாக இருந்தது; மனச்சாட்சியை அவர்கள் கர்த்தரிடம் இருந்து வரும் ஒரு "அமைதியான சிறு குரல்" என்று நினைத்தார்கள் (1 இரா. 19:12). மனச்சாட்சியானது தேவனால் கொடுக்கப்பட்டு தேவனால் பயன்படுத்தப்படுவதாய் உள்ளதென்றும், மனிதர்களைப் பாவத்திலிருந்து பாதுகாக்கத் தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக அது உள்ளதென்றும், அது மனிதனுக்குள்ளாக இருக்கும் அவனது சொந்தக் குரல்தான் என்றும் வேதாகமம் போதிக்கின்றது.*

## *இது ஒரு உண்மை நிலையாக உள்ளது*

*பாடக் கருத்தின் நேர்மறையான பகுதிக்குத் திரும்பி நாம், "மனச்சாட்சி என்றால் என்ன?" என்று கேட்கின்றோம்.*

*மனச்சாட்சி என்பது ஒரு உண்மை நிலையாக உள்ளதென்று முதலாவதாக நான் வலியுறுத்துகின்றேன். சிலர் மனச்சாட்சி இருப்பதை மறுக்கின்றார்கள். நாத்திக மற்றும் கடவுளின் இருப்பைச் சந்தேகிக்கும் கோட்பாடு கொண்ட தத்துவவாதிகள் மனச்சாட்சியின் உண்மை நிலையானது தேவன் இருக்கின்றார் என்றும் ஆவிக்குரிய உலகம் உண்டு என்று அறிவிப்பதால் அதை மறுக்கின்றார்கள். (தாமஸ் வார்ரென் அவர்கள், நாத்திகவாதியான அந்தோனி*

*ஃப்ளூவுடன் வாதம் செய்த பொழுது, அவர் பல மனிதர்கள் சில செயல்கள் சரியானவை என்றும், சில செயல்கள் தவறானவை என்றும் ஒப்புக் கொள்கின்றார்கள் என்று குறிப்பிட்டார். இதற்கொரு விளக்கமாக, யூதர்களை ஹிட்லர் நடத்திய விதமானது அகில உலகத்தாலும் கண்டனம் செய்யப் பட்டதைக் குறிப்பிட்டார். பின்பு வார்ரன் அவர்கள் இந்த அகில உலகளவிலான ஒழுக்கமுள்ள மனச்சாட்சியில் இருந்து இதை நமக்குள் வைத்தவரான தேவன் இருக்கின்றார் என்று வாதிட்டார்* [*Warren-Flew Debate*].*)*

*மனித உளவியலாளர்களும் கூட மனச்சாட்சியின் உண்மை நிலையை மறுக்கின்றார்கள் - ஏனென்றால் மனச்சாட்சியானது சில செயல்களை முற்றிலும் சரியானவை என்றும் சில செயல் களை முற்றிலும் தவறானவை என்றும் கூறுகின்றது. குற்ற மானது உண்மையே என்று அதைக் கையாள வேண்டும் - அதை மறுக்கவோ அல்லது கவனிக்காமல் விடவோ கூடாது என்றும் மனச்சாட்சி அறிவிக்கின்றது.*

*மற்றவர்கள், மனச்சாட்சி என்று ஏதோ ஒன்றிருப்பதை ஒப்புக்கொள்கின்றார்கள், ஆனால் அதன் முக்கியத்துவத்தை குறைத்து விடுகின்றார்கள். சிலர், மனச்சாட்சி நம் பின்னால் இருந்து வருகின்றது: அது வயதாவதினால் உண்டாகும் நரம்புக் கோளாறுகளாகும் என்று கூறுகின்றார்கள். சிலர், மனச்சாட்சி நம்மைச் சுற்றிலுமிருந்து வருகின்றது: சமூகமானது எது சரி அல்லது எது தவறு என்று கூறுகின்றதோ அதன் மொத்த வடிவமாகும் என்று கூறுகின்றார்கள். சிலர், மனச்சாட்சியானது நமக்குள் இருந்து வருகின்றது: நாம் அநுபவித்த எல்லா வற்றையும் பற்றிய நமது பதில்செயல் என்று கூறுகின்றார்கள். (இந்தக் காரணிகள் யாவும் மனச்சாட்சியைப் பற்றிய கல்வி அல்லது தவறான கல்வியின் ஒரு பாகத்தைப் பெற்றுள்ளன, ஆனால் மனச்சாட்சியின் தோற்றம் பற்றி இவைகள் விளக்கப் படுத்துவதில்லை.)*

*கற்றறிந்தவர்கள் என்ன கூறினாலும் (1 கொரி. 1:21ஐக் காணவும்) அது ஒரு பொருட்டாகக் கருதாமல், மனச்சாட்சி யானது மிகவும் உண்மையானதென்றும், அது தேவனிடத் திலிருந்தே வருகின்றதென்றும் அனுபவமும், வேதாகமமும் நமக்குக் கூறுகின்றன. அது நமக்குப் பின்னிருந்தோ, நமக்கு வெளியில் இருந்தோ அல்லது நமக்குள் இருந்தோ வந்ததில்லை.*

ஆனால் நமக்கு மேல் இருந்து வருகின்றது! மனச்சாட்சியைப் பெற்றிருப்பதென்பது தேவனுடைய சாயலில் படைக்கப் பட்டிருப்பதன் அடிப்படையான பாகமாய் இருக்கின்றது (ஆதி. 1:27). ஒவ்வொருவருக்கும் ஒரு மனச்சாட்சி கொடுக்கப் பட்டுள்ளது (ரோமர் 2:13-15); இது உலகளாவிய ஒரு உண்மை நிலையாகும்.[2] தேவநம்பிக்கையற்றவராயிருந்த பெர்னார்டு ஷா அவர்கள்கூட மனச்சாட்சியென்பது "சாதாரண மனிதனின் செயலாற்றலுள்ள அறிவின் பாகமாய் உள்ளது, இது ஒரு பொழுதும் இதன் வேலையில் தவறியது இல்லை" என்று ஒப்புக் கொள்ள வேண்டியதாயிருந்தது. "நாணயமிக்க எந்த ஒரு மனிதரும் மனச்சாட்சி இருப்பதை உணர்வுடன் மறுக்க முடியாது" என்று ஒருவர் கூறினார்.

## இது "ஒழுக்கத்தின் மனச்சாட்சியாய்" இருக்கின்றது

மனச்சாட்சி இருக்கின்றது என்பதை நாம் ஒப்புக் கொண்டாலும், உள்ளான மனிதனுடன் அதற்குள்ள நெருங் கிய தொடர்பினால் அதை விவரிப்பது சுலபமல்ல, மனம் (புத்தி) மற்றும் மனச்சாட்சி ஆகியவை தீத்து 1:15ல் ஒன்றாய்ப் பிணைக்கப்பட்டுள்ளன. சித்தம் மற்றும் மனச்சாட்சி ஆகியவை தொடர்புடையவைகளாய் இருக்கின்றன (அப். 23:1 மற்றும் 26:9 ஆகியவற்றை ஒப்பிடவும்). சிறப்பாக, இருதயம் (உணர்வு) மற்றும் மனச்சாட்சி ஆகியவை தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. NASBயில் "தாவீதின் மனச்சாட்சி அவனைக் கவலைப்படுத்தியது" (1 சாமு. 24:5) என்று கூறப்படுகின்றது, ஆனால் மூலமொழியான எபிரெய மொழியில் "தாவீதின் மனது அடித்துக் கொண்டிருந்தது" என்றுள்ளது. பெந்தெகொஸ்தே நாள் அன்று பேதுருவின் செய்தியானது அதைக் கேட்டவர்களின் மனச்சாட்சியைத் தொட்ட பொழுது "அவர்கள் இருதயத்தில் குத்தப் பட்டார்கள்" (அப். 2:37) என்று வசனம் கூறுகின்றது. எப்படியிருப்பினும், அப்போஸ்தலனாகிய பவுல் மனச்சாட்சி யைத் தனிப்படக் காட்டி அதன் விசேஷித்த பணிகளைப் பற்றிப் பேசினார். இவ்விதமாக நாம், "மனச் சாட்சி என்றால் என்ன?" என்று கேட்கத் தேவையாய் உள்ளது.

மனச்சாட்சி என்ற கருத்துடன் பலர் போராடியிருக்கின் றார்கள். ஒருவர், "மற்ற எல்லாம் நன்றாக உணரும் போது இது

ஒன்று மட்டும் வலி கொடுக்கும்'' என்று கூறினார். இன்னொருவர், "உள்ளான வருமானச் சேவையானது உங்கள் வருமானவரி விபரத்தைச் சோதனை செய்ய வேண்டும் என்று கூறுகின்ற ஒரு சிறு உள்ளான குரலாகும்" என்று கூறினார். ஒரு சிறு பையன் இதே போன்று பின்வருமாறு கூறினான்: "நீங்கள் தவறு செய்து விட்டீர்கள் என்பதை உங்கள் தாயாரிடத்தில் உங்கள் சகோதரி கூறுவதற்கு முன்னால் உங்களைக் கூற வைப்பதெதுவோ அதுவே மனச்சாட்சியாகும்." நகைச்சுவைத் துணுக்கொன்றில், "அது உங்களைத் தவறு செய்வதில் இருந்து பாதுகாப்பதில்லை ஆனால் அதை (தவறை) மகிழ்ச்சியுடன் அனுபவிப்பதில் இருந்து உங்களைத் தடுக்கின்றது'' என்று கூறப்படுகின்றது. மாற்கு ட்வைன் அவர்களின் இலக்கியப் படைப்பான ஹக்கிள்பரி ஃபின், மனச்சாட்சி என்பது "மனிதனின் மற்றெந்த உள்ளான உணர்வுகளைக் காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பதாகும்'' என்று முடிவு செய்தார்.

"மனச்சாட்சி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் கிரேக்க மொழியில் இருந்த ஒரு பொதுவான வார்த்தையாகும்; ஆனால் அது கல்வியாளர்கள் அல்லது சட்டத்தின் மொழி வழக்கில் பயன்படுத்தப்படாமல், மக்களின் மொழி வழக்கில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. கிரேக்க மக்களின் அன்றாட மொழிநடையில் பயன்படுத்தப்படுகையில், அது "நீங்கள் தவறு செய்யும்பொழுது உணரும் வலியாகும்'' என்று அர்த்தப் பட்டது. பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் பவுல் இந்த எளிய வார்த்தையை எடுத்து, புதிய ஏற்பாட்டில் அதை ஒரு விசேஷித்த வார்த்தையாகத் தூய்மைப்படுத்தினார்.

"மனச்சாட்சி" என்று மொழிபெயர்க்கப்பட்ட *suneidesis* என்ற கிரேக்க வார்த்தையானது "உடன்" அல்லது "ஒன்றாக" (*sun*) என்பதற்கான வார்த்தையுடன் "அறிதல்" (*oida*) என்று அர்த்தப்படும் வார்த்தையை இணைத்துப் பெறப்பட்டதாகும். "Conscience" என்ற ஆங்கில வார்த்தை இதே அர்த்தத்தையே தருகின்றது; இது இலத்தீனில் *con* ("உடன்" அல்லது "ஒன்றாக") என்ற வார்த்தையை *scio* ("அறிதல்") என்ற வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்டுள்ளது. ஆங்கிலம் மற்றும் கிரேக்க வார்த்தைகள் ஆகிய இரண்டுமே "உடன் அல்லது ஒன்றாக

அறிதல்'' என்றே அர்த்தப்படுகின்றன. இரண்டுமே நம்முடனும் நமக்குள் இருந்தும் அறியும் திறனைத்தான் குறிப்பிடுகின்றன;[3] இவைகள் நம்மைப் பற்றி நாம் அறிய உதவும் உள்ளான விழிப்புணர்வு பற்றிப் பேசுகின்றன.

Arndt மற்றும் Gingrich ஆகியோர் *suneidesis* என்பது "ஒழுக்கத்தின் மனச்சாட்சியாகும்" என்று தங்களின் அகராதியில் விவரித்துள்ளார்கள் (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and other Early Christian Literature*). Thayer அவர்களின் அகராதியில் ஒரு நீண்ட விவரிப்பு உள்ளது: "ஆத்துமாவானது ஒழுக்க ரீதியாக எது நல்லது எது கெட்டது என்று வேறுபடுத்துகையில், முன்னதைச் செய்யும்படியும் பின்னதை விலக்கும்படியும் ஒருவரைத் தூண்டுகின்றது, அது ஒன்றைப் பாராட்டுகின்றது, இன்னொன்றைக் கண்டனம் செய்கின்றது" (Joseph H. Thayer, *Greek-English Lexicon of the New Testament*). Vine அவர்கள் தம்முடைய வார்த்தைப் படிப்பு நூலில் Thayer போலவே விவரித்தார்: "ஒழுக்க ரீதியாக எது நல்லது எது கெட்டது என்று வேறுபடுத்தும் எண்ணச் செயல்பாடானது நல்லவைகளைப் பாராட்டி, கெட்டவைகளை கண்டனம் செய்கின்றது மற்றும் முன்னதைச் செய்யும்படி தூண்டுகின்றது, பின்னதைத் தவிர்க்கும்படியும் தூண்டுகின்றது" (W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words*).

Arndt மற்றும் Gingrich ஆகியோரின் சொற்றொடரானது "மனச்சாட்சி" என்ற வார்த்தைக்கு நாம் தரும் விவரிப்புக்கு மிகவும் நெருங்கியதாக இருக்கலாம்: "ஒழுக்க மனச்சாட்சி" இருப்பினும், மனச்சாட்சியைப் புரிந்து கொள்வதற்கு Thayer மற்றும் Vine ஆகியோர் செய்ததைச் செய்யும்படி நாம் கட்டாயப்படுத்தப்படுகின்றோம்: அது என்ன செய்கின்றது என்பதன் மூலம் அதை விவரியுங்கள்.

## மனச்சாட்சி விளக்கப்படுகின்றது

வேதாகமத்தின்படி, மனச்சாட்சியானது இரண்டு முதன்மைச் செயல்களையும் ஒரு துணைச் செயலையும் பெற்றுள்ளது. இந்தச் செயல்களைப் பொறுத்தமட்டில், மனச்சாட்சியானது உடலின் நரம்பு மண்டலத்துடன் ஒப்பிடப்

*படலாம்: சரீரத்துக்கு நரம்பு மண்டலம் எப்படியோ அப்படியே ஆத்துமாவுக்கு மனச்சாட்சி உள்ளது. நரம்பு மண்டலத்தின் முதன்மை நோக்கங்களைக் கவனியுங்கள்: அது அபாயத்தைப் பற்றிச் சரீரத்திற்கு எச்சரிக்கை செய்கின்றது (எடுத்துக்காட்டு: "அது சூடாக உள்ளது!") மற்றும் சரீரம் அந்த எச்சரிக்கையைக் கவனிக்காத பொழுது அது சரீரத்தைத் தண்டிக்கின்றது ("அது புண்படுத்துகின்றது!"). அதன் துணை நோக்கத்தைப் பொறுத்தமட்டில், நரம்பு மண்டலமானது அபாயத்தைப் பற்றி மற்றவர்களுக்கு எச்சரிக்கை செய்யும்படி தூண்டுகின்றது ("பிள்ளைகளே, அந்த நெருப்பை விட்டுத் தள்ளி நில்லுங்கள், இல்லையென்றால் அது உங்களைச் சுட்டுவிடும்!"). மனச்சாட்சியும் இது போலவே இருக்கின்றது.*

### *அது வேறுபடுத்துகின்றது மற்றும் கட்டளையிடுகின்றது (இயக்குகின்றது)*

*எது சரியானது மற்றும் எது தவறானது என்று நமக்குக் கூறி சரியானதைச் செய்யும்படி நம்மை ஊக்குவிப்பதே மனச் சாட்சியின் முதலாவது முதன்மைச் செயல்பாடு ஆகும். எபிரெயர் 5:14ல் "நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்க" திறன் பற்றிப் பேசப்படுகின்றது. இந்தச் செயல்பாடு பற்றிய மிகச் சிறந்த விவாதமானது அநேகமாக ரோமர் 2:13-15அ - வாக இருக்கலாம்:*

> *நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள். அன்றியும், நியாயப்பிரமாண மில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக் குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள் ... நியாயப் பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதி யிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்.[4]*

*சில செயல்கள் சரியானவை என்றும் சில செயல்கள் தவறானவை என்றும் எல்லா மனிதர்களும் - தேவனுடைய எழுதப்பட்ட பிரமாணங்களை அறியாத மனிதர்களும் கூட - உள்ளுணர்வில் அறிகின்றார்கள். எடுத்துக்காட்டாக, திருட்டு மற்றும் கொலை ஆகியவற்றுக்கு எதிரான சட்டங்கள் எல்லா*

சமூகங்களிலும் உள்ளன. இந்த ஒழுக்கரீதியான நியாயத் தீர்ப்பை மனிதர்களுக்குள்ளாக ஏற்படுத்துவது எது? மேற் சொன்ன வசனப்பகுதியில் 15ம் வசனத்தில் "அவர்களுடைய மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிறதினாலும்" என்றுள்ளது. சரியானது அல்லது தவறானது என்பது பற்றிச் "சாட்சியிடுதல்" அல்லது சாட்சி கூறுதல் என்பது மனச்சாட்சியின் முதல் செயல்பாடாகும். "அதை என்னால் சுத்த மனச்சாட்சியுடன் செய்ய முடியாது" என்று நாம் கூறும்பொழுது இந்த செயல் பாட்டையே குறிப்பிடுகின்றோம்.

**அது நியாயந் தீர்க்கின்றது மற்றும் தண்டனையை நிறைவேற்றுகின்றது**

மனச்சாட்சியினால் தடை செய்யப்பட்டதை நாம் செய்யும் போதோ அல்லது நாம் செய்யும்படி அது ஊக்குவித்தவைகளைச் செய்யத் தவறும் போதோ நம்மை நியாயந்தீர்த்து நமக்குத் தண்டனை விதிப்பது என்பதே மனச்சாட்சியின் இரண்டாவது முக்கியச் செயல்பாடு ஆகும். மனச்சாட்சியின் கட்டளைகளைப் பின்பற்றும்படி அது நம்மைக் கட்டாயப் படுத்த முடியாது, ஆனால் அதற்கு நாம் எப்படிக் கீழ்ப்படிகின்றோம் என்பதைப் பொறுத்து அது நம்மை ஆசீர்வதிக்க அல்லது தண்டிக்க முடியும். உடனடியான நியாயத்தீர்ப்பு தருவதில் அது ஒரு நீதிபதியாக, சாட்சியாக மற்றும் நியாயத்தை முடிவு செய்பவராக - இவை எல்லாம் ஒன்றிணைந்து செயல்படுவதாக இருக்கின்றது. பிறகு அது நீதிமன்றத்தின் தண்டனையை நிறைவேற்றுபவராகவும் செயல்படுகின்றது. இவ்விதமாக, புறஜாதியாரின் மனச் சாட்சியானது "சாட்சியிடுவது" பற்றிப் பேசிய பிறகு பவுல், "குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறது" (ரோமர் 2:15ஆ) என்றும் கூடுதலாகக் கூறினார்.

ஒருவர் தம்மைப் பாதுகாக்கும் மனச்சாட்சியைப் பெற்றிருப்பதென்பது - "எது சரியானதோ அதைச் செய்தாய்" என்று கூறும் மனச்சாட்சியைப் பெற்றிருப்பது (ரோமர் 9:2ஐக் காணவும்) - அவருக்கு வாழ்வில் கிடைக்கும் மாபெரும் ஆசீர் வாதங்களில் ஒன்றாகும். இதை வேதாகமம், "நல்மனச்சாட்சி" யைப் பெற்றிருத்தல் (அப். 23:1; 1 தீமோ. 1:5, 19;

1 பேது. 3:16, 21; எபி. 13:18),[5] "குற்றமற்ற மனச்சாட்சியை"ப் பெற்றிருத்தல் (அப். 24:16) அல்லது "சுத்த மனச்சாட்சி"யைப் பெற்றிருத்தல் (1 தீமோ. 3:9; 2 தீமோ. 1:4)[6] என்று அழைக்கின்றது. பிரெஞ்ச்சுக்காரர்கள் பின்வரும் பழமொழி ஒன்றைக் கூறுவதுண்டு: "சுத்த மனச்சாட்சி என்பது ஒரு நல்ல தலையணையாகும்." சுத்த மனச்சாட்சியை "பரலோகத்தின் முன் சுவை" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.

சுத்த மனச்சாட்சியானது பவுலுக்குத் தன்னம்பிக்கை கொடுத்து தொடர்ந்து செயலாற்றக் கூடியவராக்கிற்று. கொரிந்தியருக்கு அவர், "... கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ்சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது" (2 கொரி. 1:12) என்று கூறினார். தாம் செய்வது சரியானது என்ற நிச்சயத்தைக் காட்டிலும் அதிகமான வேறு எதுவும் ஒரு மனிதரைத் தாங்கி நிறுத்த முடியாது. உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு, "கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுள்ளவர்களாயிருங்கள்" (1 பேது. 3:16).

இதற்கு மறுபுறத்தில், ஒருவர் தம்மைக் குற்றம் சாட்டும் மனச்சாட்சியைப் பெற்றிருப்பது - "நீ செய்ததெதுவோ அது தவறானது" என்று கூறும் மனச்சாட்சியைப் பெற்றிருப்பது - அவருக்கு வாழ்வில் கிடைக்கும் மாபெரும் சாபங்களில் ஒன்றாகும். குற்ற மனச்சாட்சியின் தண்டிக்கும் இயல்பைப் பற்றி நீதிமொழிகள் 28:1அ -வில் "ஒருவனும் தொடராதிருந்தும் துன்மார்க்கர் ஓடிப் போகிறார்கள்" என்று ஞானி கூறினார். சுத்த மனச்சாட்சி என்பது பரலோகத்தின் முன் சுவையானால், குற்ற மனச்சாட்சி என்பது நரகத்தின் முன் காட்சியாகும். நரகத்தைப் பற்றி இயேசு, "அங்கே அவர்கள் புழு சாவாமலும் ..." என்று விவரித்தார். "சாவாத புழு" என்பது குற்றம் சாட்டுவதை விட்டு ஓயாத மனச்சாட்சியைப் பற்றிய குறிப்பாயிருக்கலாம்.

மோசேயின் நியாயப்பிரமாணமும் அதன் பலிகளும் நேர்மையுள்ள எந்த ஒரு தனிநபரின் மனச்சாட்சியிடமிருந்தும் குற்றவுணர்வை நீக்கிப் போட முடியாதிருந்தது என்று குற்ற

*மனச்சாட்சியைப் பற்றி எபிரெய ஆசிரியர் அதிகமாய்க் கூறினார் (எபி. 9:9, 14; 10:2). அவர் குற்ற மனச்சாட்சியை எபிரெயர் 10:22ல் "துர்மனச்சாட்சி" என்று அழைத்தார். "துர்மனச்சாட்சி" என்பது "சரியாகச் செயல்படாத" மனச் சாட்சி என்பதாகச் சில எழுத்தாளர்கள் எண்ணுகின்றார்கள், ஆனால் அது "குற்றவாளி! குற்றவாளி! குற்றவாளி!" என்று கூவி ஒரு மனிதரைக் கண்டனம் செய்யும்போது தேவன் அதை வடிவமைத்தபடி மிகச் சரியாக அது செயல்படுகின்றது என்று தான் நான் கருதுகின்றேன்.*

*வேதாகமத்திலிருந்தும், வரலாற்றிலிருந்தும், மற்றும் நமது சொந்த வாழ்விலிருந்தும் சுய கண்டனம் பற்றிய கடுந்துயரம் நிறைந்த நிகழ்ச்சிகள் பலவற்றைப் பெருக்கமாய்க் கூறமுடியும். வேதாகமத்தின் எடுத்துக்காட்டுகளைப் பொறுத்தமட்டில், மற்றவைகளுடன் கூட நாம், காயீன் (ஆதி. 4:9), சவுல் அரசர் (1 சாமு. 26:21), ஏரோது அரசர் (மாற். 6:16) மற்றும் யூதாஸ் (மத். 27:3-5) ஆகியோர் பற்றி நினைக்கின்றோம்.*

*குற்ற மனச்சாட்சியின் சித்திரவதை பற்றிய எடுத்துக் காட்டுகள் பல, வரலாற்றில் நிறைந்துள்ளன. ஒரு முறை, கொலை வழக்கு விசாரணையொன்றிற்காக நீதிபதி இருக்கை யில் அமர்ந்திருந்தார். விசாரணையின் நடுவில், நீதிமன்றமே திகைப்படையும் வகையில், நீதிபதி தம் இருக்கையை விட்டு இறங்கி வந்து, பல ஆண்டுகளுக்கு முன் தாம் ஒருவரைக் கொலை செய்திருந்ததாக அறிக்கையிட்டார். அவர் நீதி பெறுவதிலிருந்து தப்பியோடி, புதிய சமூகம் ஒன்றிற்கு வந்திருந்து அம்மக்களின் நம்பிக்கையைச் சம்பாதித்திருந்தார். அவர் நிறையச் சொத்துக்களைச் சேர்த்து, தமக்கென்று நற்பெயரைப் பெற்று, கடைசியில் நீதிபதியாகியிருந்தார். இருப்பினும், கொலை வழக்கு விசாரணையின்போது, சாட்சியத்தை அவர் கேட்டதும், விசாரணை செய்யப்பட்ட மனிதரின் முகத்தை அவர் பார்த்ததும் ஆன இவ்விரு செயல் களும் அவரது மனச்சாட்சியை விழித்தெழச் செய்து அவருக்குத் தண்டனை விதித்தது. அவர் அதிகாரிகளிடம் சரணடைந்து தம் குற்றத்திற்காக விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.*

*குற்றம் சாட்டும் மனச்சாட்சியினுடைய சவுக்கின் கொடுக்கை நாம் யாவருமே அனுபவித்திருக்கின்றோம். சில காலங்களுக்கு முன் கிறிஸ்தவப் பள்ளியொன்றின் ஆசிரியர்*

பின்வரும் கடிதம் ஒன்றைப் பெற்றார்:

> *நான் உங்கள் பள்ளியில் (தேதி) கல்வியாண்டில் மாணவனாய் இருந்தேன். நீங்கள் பழைய ஏற்பாட்டின் ஆராய்ச்சி பற்றிய பாடம் நடத்துகையில் நான் அந்த வகுப்பில் இருந்தேன். எங்களது பாடப் பணியில் நாங்கள் பழைய ஏற்பாடு முழுவதையும் படிக்க வேண்டியதும் ஒரு பகுதியாயிருந்தது. எனது வாசிப்பு அட்டவணையை நான் திருப்பி அதில் நான் எல்லா புத்தகங்களையும் முற்றிலும் படித்து விட்டதாகச் சுட்டிக்காட்டியிருந்தேன், ஆனால் உண்மை என்னவென்றால், அதன் இரண்டாம் பாதியில் ஏறக்குறைய 40% மட்டுமே நான் மேலோட்டமாகப் படித்தேன். உண்மையில் நான் 60% மட்டுமே படித்தேன், ஆனால் காலம் முடிந்தபோது எல்லாப் புத்தகங்களையும் படிக்க வேண்டியதாய் இருந்தது ... எனவே பழைய ஏற்பாடு முழுவதையும் படித்தது பற்றி நான் கூறியது அப்பட்டமான பொய்யாகும். அன்றும் இன்றும் அது என்னைக் கவலைக்குள்ளாக்குவதாய் உள்ளது. எதைப் பற்றியும் ஒருவர் பொய் கூறக் கூடாதே, அதிலும் குறிப்பாக வேதாகமத்தைப் படிப்பது பற்றி நான் பொய் கூறியது வெட்கக் கேடான விஷயமல்லவா!*
>
> *எனவே நான் இதை உங்களிடம் அறிக்கையிட்டு உங்களின் மன்னிப்பை வேண்டுகின்றேன். மேலும், எனது மதிப்பெண் பட்டியல் மாற்றப்பட வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், என்னை (கல்லூரியின் பெயர்) தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். எனது இந்த வெட்கக் கேடான பொய்யினிமித்தம் நான் மறுபடியும் உங்களிடத்தில் மன்னிப்புக் கேட்கின்றேன். நான் இது பற்றிக் கர்த்தரிடத்தில் பலமுறை வருந்தி மன்னிப்புக் கேட்டிருக்கின்றேன், ஆனால் இதை உங்களிடத்தில் மனம் வருந்தி அறிக்கையிடாத வரையில் எனக்கு மன அமைதி கிட்டாது என்பதைக் கடைசியில் உணர்ந்தேன்.*
>
> *உங்கள் நேரத்திற்காக நன்றி. நீங்கள் என்னை மன்னித்தீர்களா என்பது பற்றி விரைவில் ஒரு குறிப்பு அனுப்புவீர்கள் என்று நான் நம்புகின்றேன்.*

நமது மனச்சாட்சியின் கட்டளைகளை நாம் பின்பற்றத் தவறும் பொழுது பெரிய விளைவுகள் ஏற்படுகின்றன என்பதால், மனச்சாட்சியை மீறக் கூடாது என்பதை வேதாகமம் பெரிதும் வலியுறுத்துகின்றது (ரோமர் 14:23; [இவ்வசனம் பற்றி விளக்கத்தை அடுத்த பாடத்தில் காணவும்] அப். 24:16). மனச்சாட்சியை நிலையாக மீறுவது என்பது தேவனால் அதற்குத் தரப்பட்ட செயல்களைச் செய்ய முடியாத

*நிலைக்குக் கொண்டு வருகின்றது (1 தீமோ. 4:1; பாடத்தின் இந்த அம்சமானது அடுத்த பாடத்தில் இன்னும் விரிவாகப் பரிசோதிக்கப் படுகின்றது).*

## அது மற்றவர்களைப் பாராட்டுகின்றது அல்லது கண்டனம் செய்கின்றது

*மற்றவர்களின் செய்கையைப் பாராட்டுதல் அல்லது கண்டனம் செய்தல் என்பது மனச்சாட்சியின் துணைச் செயல் ஆகும். தன்னையே அது நியாயம்தீர்த்துக் கொள்வதோடு, சரியான மற்றும் தவறான செயல்கள் பற்றிய உள்ளான கட்டுமானம் பெற்ற தராதரங்களின் மூலம் அது மற்றவர்களையும் நியாயம் தீர்க்கின்றது. இதை உணர்ந்திருந்த பவுல், தாம் சரியானவராய் இருந்தார் என்பதைத் தமது நிருபத்தை வாசிப்பவர்களின் மனச்சாட்சி ஒப்புக்கொள்ளும்படிக்கு அடிக்கடி வேண்டுகோள் விடுத்தார். எடுத்துக்காட்டாக, 2 கொரிந்தியர் 4:2ல் அவர், தாம் சத்தியத்தின்படி நடந்தார் என்ற உண்மையானது "தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும்" உத்தமரென்று அவரது வாழ்க்கையைப் பாராட்ட வேண்டும் என்று அவர் எழுதினார். மறுபடியும் அவர், "உங்கள் மனச்சாட்சிக்கும் வெளியரங்கமாயிருக்கிறோம் என்று நம்புகிறேன்" (5:11) என்றும் கூறினார்.*

*மனச்சாட்சியானது மற்றவர்களைப் பாராட்டுதல் அல்லது கண்டனம் செய்தல் போன்ற செயல்களைச் செய்வதால், மனச்சாட்சியின் கடமையானது மற்றவர்களுடன் நமக்குள்ள உறவை மாற்றமின்றிப் பாதிக்கின்றது. ஆகவே, உறவு முறைகளில் மனச்சாட்சியின் செயல்பாடுகள் பற்றி அதிலும் குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் உள்ள உறவுமுறைகளில் அதன் செயல்பாடு பற்றி மிக விரிவான விவாதங்களைக் காண்பதில் நாம் வியப்படைவதில்லை (ரோமர் 14; 15; 1 கொரி. 8-10; இந்த அதிகாரங்களைப் பற்றி விரிவாய் பரிசீலனை செய்வது இத்தொடரின் நோக்கம் அல்ல, ஆனாலும் அடுத்த பாடத்தில் இவைகளைப் பற்றி இன்னும் அதிகமாய்க் கூறப்பட்டுள்ளது).*

# *முடிவுரை*

*மனச்சாட்சியைப் பற்றி நான் விளக்கமளித்தது போலவே மிகச் சரியான விளக்கத்தை நீங்கள் கொடுத்தாலும், கொடுக்கா விட்டாலும் அல்லது அதன் செயல்பாடுகளைப்பற்றி நான் கூறிய அதே வழி முறையில் நீங்கள் கூறினாலும் கூறா விட்டாலும், பின்வரும் கூற்றுக்கள் உண்மையானவை என்று நீங்கள் அறிகின்றீர்கள்: மனச்சாட்சி என்பது இருக்கின்றது; மனச்சாட்சியானது எது சரி மற்றும் எது தவறு என்பதை நமக்குக் கூறுகின்றது; மனச்சாட்சியை மீறிக் கொண்டு, பின்பு அத்துடன் வாழ்வது என்பது பயங்கரமானது! இந்த உண்மைகள் ஒவ்வொரு மனிதரின் இருதயத்தின் ஆழத்திலும் எழுதப்பட்டுள்ளது.*

*நான் என்னுடன் வாழ வேண்டும், எனவே*
*நான் என்னை அறியத் தகுதியாகும்படிக்கு*
*விரும்புகின்றேன்;*
*நாட்கள் கடந்து செல்லச் செல்ல, நான் என்னையே*
*எப்பொழுதும்*
*கண்ணில் நேராய்ப் பார்ப்பவனாய் இருக்க*
*விரும்புகின்றேன்;*
*அஸ்தமிக்கும் சூரியனுடன் நின்று கொண்டு*
*நான் செய்தவற்றுக்காய் என்னையே வெறுக்க எனக்கு*
*விருப்பமில்லை*

*நான் என்னையே என்னிடத்திலிருந்து*
*ஒருபோதும் மறைக்க முடியாது,*
*மற்றவர்கள் ஒருபோதும் (என்னில்) கண்டிராததை நான்*
*காண்கின்றேன்,*
*மற்றவர்கள் ஒருபோதும் (என்னைப்பற்றி)*
*அறியாததை நான் அறிகின்றேன்,*
*என்னையே நான் ஏமாற்றிக் கொள்ள முடியாது எனவே*
*எது நடந்தாலும் நான் என்னை மதிப்பவனாக,*
*உளைச்சலற்ற மனச்சாட்சியுள்ளவனா யிருக்கவே*
*விரும்புகின்றேன்.*

(“Myself” *என்ற கவிதையின் முதல்*
*மற்றும் கடைசிக் கவிகள்).*

*நாம் இதை முடிப்பதற்கு முன்பாக, கடைசியாக ஒரு கேள்வியைக் கேட்டு அதற்குப் பதில் தருவோம்: ஒரு மனிதர் தம் மனச்சாட்சிக்குக் கீழ்ப்படியாமல் போய், குற்ற உணர்வினால் அரிக்கப்படும் பொழுது, அவரால் என்ன செய்ய முடியும்?*

*உளவியல் பள்ளிகளில் சில, உண்மையில் நீங்கள் குற்றமுள்ளவரல்ல, எனவே குற்ற உணர்வைக் கண்டு கொள்ளாது விடுங்கள், உங்கள் சிந்தையில் இருந்து அதை நீக்கிப் போடுங்கள், மற்றும் அதை உங்கள் பின்னால் போட்டு விடுங்கள் என்று கூறுகின்றன. குற்ற உணர்வானது மறுபடியும் மேலே எழும்புவதால் இந்த அணுகுமுறை செயல்படுவதில்லை. உங்களிடம் உள்ள நல்லவைகள் உங்களிடம் உள்ள கெட்டவைகளை எடை குறையச் செய்து விடுகின்றது. எனவே முடிந்த அளவுக்கு நல்லவராயிருங்கள் மற்றும் நீங்கள் செய்திருக்கும் தவறுகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் என்று மனித தத்துவம் கூறுகின்றது. இருப்பினும், ஒரு மனிதர் எப்பொழுது குற்றம் செய்துள்ளார் என்பதை அவர் உள் ஆழத்தில் இன்னமும் அறிந்துதான் இருப்பார்.*

*குற்றத்தைக் கண்டுகொள்ளாது விடுவது என்பதோ அல்லது நமக்கு நாமே அதற்குப் புறம்பே பேச முயற்சிப்பது என்பதோ குற்றத்திற்கான வேதாகமத்தின் பதில் அல்ல. ஆனால் இயேசுவின் இரத்தத்தினால் குற்றத்தில் இருந்து எல்லாக் காலத்திலும் விடுபட முடியும் என்பதே வேதாகமத்தின் பதில் ஆகும்! ஏவுதல் பெற்ற எழுத்தாளர், "கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபி. 9:14) என்று வலியுறுத்தினார். நாம் இயேசுவுக்கு நம்மை ஒப்புக் கொடுக்கையில் அவரது இரத்தத்தினால் "துர் [அல்லது குற்றம் சாட்டும்] மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாகவும் சுத்த ஜலத்தால் கழுவப்பட்டவர்களாகவும்" (எபி. 10:22அ) நம் மனச்சாட்சி சுத்திகரிக்கப்படுகின்றது. சரீரத்தை "சுத்த ஜலத்தால் கழுவுவது" என்பது ஞானஸ்நானத்தைக் குறிப்பதாகப் பல கல்வியாளர்கள் ஒப்புக் கொள்ளுகின் றார்கள். ஞானஸ்நானத்தை "தேவனைப் பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கை" (1 பேது. 3:21) என்று குறிப்பிடும்போது பேதுரு, மனச்சாட்சியைச் சுத்திகரித்தலை*

*யும் நமது கீழ்ப்படிதலையும் ஒன்றாய்ப் பிணைத்தார்.*

*சுத்திகரிக்கப்பட்ட மனச்சாட்சியின் ஆசீர்வாதத்தை நீங்கள் அறிய விரும்பினால், நீங்கள் சரியானது என்று அறிந்துள்ளதை இன்றே கர்த்தருக்குக் கீழ்ப்படியும் செய்கையைச் - செய்யுங்கள்!*

---

*குறிப்புகள்*

*[1]"மனச்சாட்சி" என்ற வார்த்தை* KJV *பழைய ஏற்பாட்டில் ஓரிடத்திலும் காணப்படவில்லை. ஆனால்* NASB *பழைய ஏற்பாட்டில் ஓரிடத்தில் மட்டும் அவ்வார்த்தை காணப்படுகின்றது. [2]நமது விவாதம் தொடருகையில், மனச்சாட்சியை அமைதியாயிருக்கச் செய்ய முடியும் (இவ்விதமாகவே சில மனிதர்கள் தாங்கள் மனச்சாட்சியில்லாதவர்கள் போல் நடக்கின்றார்கள்) என்ற உண்மையை ஆராய்வோம். இருப்பினும் இந்தப் பாடத்தில் நாம், மனச்சாட்சியென்பது மனிதரின் உள்ளாக இருக்கிறது என்பதை வலியுறுத்தவே விரும்புகின்றோம். [3]மனச்சாட்சியென்பது தேவன் "உடன் அறிதல்" என்று கடந்த காலத்தின் எழுத்தாளர்கள் குறிப்பிட்டார்கள், எனவே "தேவனுடைய குரல் நமக்குள் உண்டு" என்ற கருத்து உண்டாயிற்று. இருப்பினும், ஏற்கனவே வலியுறுத்தியபடி, தேவனே நமக்கு மனச் சாட்சியைத் தந்துள்ளார், ஆனாலும் மனச்சாட்சி என்பது மனிதருக்குள் உள்ள அவரது சொந்தக் குரல் தானே தவிர அது தேவனுடைய குரலாயிருப்பதில்லை. [4]இவ்வசனப் பகுதியானது, ஒரு மனிதர் "தம் மனச்சாட்சியின்படி வாழ்ந்தால்" அவர் முற்றிலும் சரியானவரே என்று போதிப்பதற்குத் தவறாகப் பயன்படுத்தப் படுகின்றது. இருப்பினும், இவ்விடத்தின் சந்தர்ப்பப் பொருளில் பவுல், நியாயப் பிரமாணத்தைப் பெற்ற யூதர்களோ அல்லது "மனச்சாட்சியின் பிரமாணத்தை" உடைய புறஜாதியாரோ எவரொருவரும் தாம் பெற்றிருக்கும் வெளிப்படுத்து தலுக்கேற்ற முறையில் வாழவில்லை என்றுதான் போதித்தார். "எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானோம்" (ரோமர் 3:23) என்பதே அவருடைய முடிவாக இருந்தது. [5]இரண்டு வேறுபட்ட கிரேக்க வார்த்தை கள் "நல்ல" என்று மொழிபெயர்க்கப்பட்டன. "நல்மனச்சாட்சி" என்பதற் கான பெரும்பான்மையான குறிப்புகள் agathos என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. எபிரெயர் 13ல்* kalos *என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்கும் மனச்சாட்சியைக் குறிக்கப் பயன்படும்போது இவ்விரு வார்த்தைகளும் ஒரே அர்த்தம் கொண்டுள்ளன. [6]இது* NASB*யில்* "clear" *என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது* (katharos). *இதன் அர்த்தம்* "pure" *(*KJV*யில் காணவும்) அல்லது* "cleansed" *என்பதாகும்.*